உள்ளபடியால் அந்தத் திட்டம் அந்த வகையில் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. எனவே, அதை விரிவாக்க தற்போது வசதியில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பத்மநாபபுரம் நகருக்குக் குடிநீர் வழங்கல்.

348—(* வினா எண் 4514) திரு. வை. பாலச்சந்திரன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்மநாபபுரம் நகருக்குக் குடிநீர் வழங்க அரசிடம் புதுத்திட்டம் ஏதாகிலும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) பத்மநாபபுரம் நகராட்சிக்கு குழித்துறை ஆற்றை ஆதாரமாகக் கொண்டு புதிய குடிநீர்த் திட்டம் உருவாக்க தேவையான ஆய்வுப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் குடிநீர்த் திட்டத்தை இந்த நடப்பாண்டிலேயே மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எதையாவது இந்த அரசு மேற்கொண்டிருக்கிறதா?

(முற்பகல் 10-20)

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் நகராட்சிக்கு குழித்துறை ஆற்றை ஆதாரமாகக் கொண்டு, புதிய குடிநீர்த் திட்டம் உருவாக்க தேவையான அளவு பணிகள் நடைபெற்று வருகின்றன. அங்கே இருக்கிற நகராட்சியை, இதை ஆய்வு செய்வதற்காக 78,000 ரூபாய் பணம் கட்டச் சொல்லும்படி நாங்கள் கேட்டுக் கொண்டிருக்கிறோம். மொத்தமாக ஏற்படுகிற செலவோடு அதையும் சேர்த்துக் கொள்வதாகச் சொல்லியிருக்கிறோம்.